குடும்பத்தினர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் 2-3-1992 அன்று வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டா கொடுக்கவேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்பு நான் கேட்ட கேள்வியாகும் இது. தற்போது பட்டாக்கள் கொடுத்திருப்பதால் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 133, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

133--

வேலூர் நகரில் இலவச விட்டு மனைப் பட்டா

*39664--**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலூர் நகர், சத்துவாச்சாரி, சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாவரம் பகுதியில் வாழும் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர் நகரம், சத்துவாச்சாரி, சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாபுரம் பகுதிகளில் வாழும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை கோரிக்கை மனுக்கள் ஏதும் இதுகாறும் வரப்பெறவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம், பழித்தது ஒழித்து விடின்' என்று சொன்னார் வள்ளுவர். ஆனால் நாம் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோமா என்று தெரியவில்லை. ஆங்கிலப் படையெடுப்புக்குப் பின்னர் நாம் எல்லாம் கிராப்

1996 பிப்ரவரி 26]

வெட்டிக்கொள்ளக்கூடிய அளவில் உள்ள அந்த சவரத் தொழிலாளர்கள் நல்ல நிலையில் இருக்கவேண்டும். மனுக்களே வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நானே, சத்துவாச்சாரி மற்றும் அல்லாபுரம் ஊராட்சி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடியவர்களின் மனுக்களைப் பெற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கொடுத்தும், அதற்கான நிலம் கையகப்படுத்தப்படாமல் இருக்கிறது. நானே அதற்குச் சாட்சி என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வேலூர் நகரம், சத்துவாச்சாரி, சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாபுரம் பகுதிகளில் வாழ்கின்ற சவரத் தொழிலாளர்கள், ஆண்களை அழகு படுத்துகின்ற அந்த நல்லதொரு வேலையைச் செய்துகொண்டு இருப்பவர்கள், அழக்கூடாது. அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வேண்டுமென்று நானே மனுக்கள் கொடுத்து இருக்கிறேன். அந்த மனுக்கள் வேறு எங்காவது போய்விட்டாலும், ஒரு வாரத்திற்குள் வேறு மனுக்களை நானே பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரிடமோ அல்லது வேறு யாரிடமோ கொடுக்கச் சொன்னால், கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு மாதம் 2 மாத காலத்திற்குள் நிலத்தைக் கையகப்படுத்தி அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மாண்புமிகு உறுப்பினரிடமிருந்தோ வேறு யாரிடமிருந்தோ வரவில்லை. அவர் யாரிடமிருந்து மனு பெற்றார், யாரிடம் மனுவை கொடுத்தார் என்று தெரியவில்லை. ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அரசிடம் எந்த மனுவும் நிலுவையில் இல்லை. இந்தப் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கவேண்டும் என்று எந்தக் கோரிக்கையையும் அவர்கள் வைக்கவில்லை. எனவே, அவர்களுக்கு இந்தச் சமயத்தில் உதவி செய்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவரத் தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் மனுவைக் கொடுத்து நானே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருவேளை அரசாங்கத்திற்கு உட்பட்டவரா என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே

விளக்கவேண்டும். ஏனென்றால், நானே கொடுத்திருக்கிறேன். அப்படிக் கொடுத்தது ஒரு வேளை தவறிப் போய் இருக்கலாம். மீண்டும் ஒரு வார காலத்திற்குள் கூட மனுவை கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சவரத் தொழிலாளர்கள் சங்கம் என்னிடம் கொடுத்ததை, இல்லை என்று சொன்னால், நான் எங்கே போய்ச் சொல்வது? ஆகவே...,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்கிறார், அத்தகைய கோரிக்கை மனுக்கள் சம்பந்தப்பட்ட முடிதிருத்தும் தொழிலாளர்களிடமிருந்து வரவில்லை என்று.

திரு. சி. ஞானசேகரன்: மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நானே நேரில் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறேன். ஒருவேளை வேறு எங்காவது அது போய்விட்டிருந்தாலும் கூட ஒரு வாரம் 10 நாட்களுக்குள் நான் அந்த மனுக்களை மீண்டும் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே சேர்த்து விடுகிறேன். அவர்களுக்குக் குறை இருக்கிறது. அந்த குறை இருப்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்து, நிலத்தைக் கண்டெடுத்து மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலர் மூலமாக கையகப்படுத்தி, பட்டா வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. உறுப்பினர் கோரிக்கை வைத்தாலும் வைக்காமல் இருந்தாலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்த மக்களுக்கு வீடுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்பதுதான் புரட்சித்தலைவி அரசின் லட்சியம். அந்த லட்சியத்தை நோக்கி நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் முடிதிருத்தும் தொழிலாளர்களிடமிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை என்பதைத்தான் நானும் எடுத்துச் சொல்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்ததாக இதுகாறும் சொல்லவில்லை. சங்கத்திலிருந்து கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். சங்கம் என்று சொல்கிறபோது லெட்டர்-பேட் மூலமாகக் கொடுக்கலாம்.

1996 பிப்ரவரி 26]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: அவர்கள் யாருக்குக் கொடுக்கிறார்கள், சங்கத்தின் தலைவருக்குக் கொடுக்கிறார்களா, அல்லது யாருக்குக் கொடுக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகிகள் எந்தக் கிராமத்தில் இருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. எனவே, வேலூர் நகர், சத்துவாச்சாரி, சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாவரம் பகுதிகளில் வாழும் எந்த முடிதிருத்தும் தொழிலாளர்களும் இதுகாறும் தங்களுக்கு வீட்டுமனை வேண்டும் என்று கோரிக்கை மனு ஏதும் வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முடிதிருத்தும் அந்தத் தொழிலாளர்களிடருந்து மனுக்களைப் பெற்று, கொடுத்தால், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 134, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

134--

கலைவாணர் நினைவகம்

38321--திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த வீட்டை நினைவகமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.